

# தி.மு.கழகத்தின் பலமான அடித்தளம்!

**கழக இளைஞர் அணி நடத்திய, 'தி.மு.க. 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில், 'வரலாறு படிப்போம்; வரலாறு படைப்போம்' என்ற தலைப்பில் இயக்குநர் கரு.பழனியப்பன் அவர்கள் ஆற்றிய உரை :**

"கோவனின் இசை நிகழ்ச்சியை, பல நாள்களுக்குப் பிறகு, இன்று நான் முழுமையாக ஒரு மணி நேரம் உட்கார்ந்து கேட்கிறேன். இந்த நிகழ்ச்சி தொடர்ச்சியாக நான்கு, ஐந்து நாள்களாக நடந்துகொண்டிருக்கின்றன. எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் நான்கு நாள்களுக்குத் தொடரப்போகிறது இது.

### மீண்டும் நம் ஆட்சி

இதை முன்னெடுத்ததற்காக நம் துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தலைவரே பாராட்டினாலும்கூட, என்னைப் போன்ற அபிமானிகளும், தொண்டர்களும், இளைஞர்களும் பாராட்டுவதையே அவர் மேலும் விரும்புவார் என்பதற்காகச் சொல்கிறேன். இது மிகச் சிறந்த முன்னெடுப்பு. இதை நாம் ஒரு நான்கு ஆண்டுக் காலம் முன்னரே தொடங்கி இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால் ஒன்றும் பரவாயில்லை. அடுத்த ஐந்து ஆண்டுகளும் நாம்தான் இருக்கப்போகிறோம். அதனால் தொடர்ந்து செய்யலாம்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு பெரிய சாதனையாக நான் நினைப்பது, அறிவுத் திருவிழா என்ற பெயர் வைத்து, அதில் இவ்வளவு பதிப்பகங்களை ஒன்றுகூட்டி, அரசியல் புத்தகங்களுக்காக ஒரு கண்காட்சியை நடத்துவது. இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த பிறகு, மாவட்டம்தோறும் ஒவ்வோர் இடத்திலும் புத்தகத் திருவிழா தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. அது இந்த ஆட்சியின் சாதனைகளில் மிக முக்கியமானது.

முற்போக்கு புத்தகக் காட்சி என்று ஒன்று வைத்து, அதில் அரசியல் புத்தகங்களுக்கு மட்டுமே தளம் அமைத்து, அங்கே எல்லோரும் கூடி அரசியல் பேசுவது என்பது தமிழ்நாட்டில் தற்போது சிலருக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

### பொழுதுபோக்கு இல்லை

'என்னடா இது வெறும் பொழுதுபோக்காக நாம் அரசியல் நடத்திக் கொண்டிருக்கலாம் என்று பார்த்தால், எல்லோருக்கும் இவர்கள் அரசியல் தெளிவை ஏற்படுத்திவிடுவார்கள் போல இருக்கே. புத்தகம் படிக்கச் சொல்கிறார்களே, பேசுகிறார்களே' என்று பதறி அறிவுத் திருவிழாவை விமர்சிக்கிறார்கள். யாரும் எந்தத் தெளிவும் பெற்றுவிடக் கூடாது என்று நினைத்துக்கொண்டிருக்கிற ஒரு காலகட்டத்தில் இந்தியாவின் ஒரு முக்கியமான இயக்கம், அறிவுத் திருவிழா என்ற பெயரில், ஒரு வார காலம் தொடர்ச்சியாக இதைப் போன்ற நிகழ்ச்சியை நடத்துவது என்பது பாராட்டுக்குரியது.

அதைவிடச் சிறப்பு, இந்த அறிவுத் திருவிழாவின் முத்தாய்ப்பாக, 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்று அடர்த்தியான 1,120 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தை இளைஞர் அணியின் செயலாளரும், தமிழ்நாட்டின் துணை முதல்வருமாக இருக்கிற திரு.உதயநிதி ஸ்டாலின் கொண்டுவந்திருப்பது பாராட்டுக்குரியது. அந்தப் புத்தகத்தின் தொகுப்பாசிரியர்களுக்கும், ஆலோசனைக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் என் தனிப்பட்ட நன்றி.



**கரு.பழனியப்பன்**
**இயக்குநர்**



* கோவன் கலைக்குழு

### இரண்டு புத்தகங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி தம்பிமார்கள் எல்லோருக்கும் நான் சொல்ல விரும்புவது, அவசியம் இந்தக் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற புத்தகத்தை எல்லோரும் இரண்டு பிரதிகள் வாங்குங்கள். ஒன்று நாம் படிக்க, நம் மீது அவதூறு பரப்பி வசைபாடிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்குக் கொடுப்பதற்கு இன்னொரு புத்தகம். 'தம்பி இது 1,120 பக்கங்களைக் கொண்ட புத்தகம். மொத்தமாக உட்கார்ந்து படிக்க முயற்சி செய்யாதே. காரணம், நீ வாழ்நாளில் படித்ததே 1,120 பக்கம் இருக்காது. அதனால் நீ வாரத்துக்கு 30 பக்கம் படித்தால் போதும்' என்று சொல்லுங்கள்.

அதிலும் குறிப்பாக, ஐயா க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதியுள்ள கட்டுரையைப் படிக்கச் சொல்லுங்கள். பவழக்காரத் தெருவில் தி.மு.க தொடங்கப்பட்ட நாளிலிருந்து, பவளவிழா வரையிலும் முக்கியமான ஒரு சம்பவத்தைக்கூட விட்டுவிடாமல், ஒரு போராட்டத்தைக்கூட விட்டுவிடாமல், ஒரு துன்பத்தைக்கூட விட்டுவிடாமல், ஒரு இன்பத்தைக்கூட விட்டுவிடாமல் எல்லாவற்றையும் பதிவு செய்திருக்கும் கட்டுரை. க.திருநாவுக்கரசு ஐயா அவர்களுக்கு இந்த இயக்கத்தின்மீது, எவ்வளவு பெரிய ஈர்ப்பும் பிணைப்பும் கொண்டிருந்தால் இப்படி எழுத முடியும் என்று அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

இன்று அரசியலுக்கு வருபவர்கள் எல்லோருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் எதிரியாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிப்பதற்காகத்தான் அத்தனை கட்சிகளும் உருப்பெறுகின்றன. அப்படி உருப்பெறுகிற கட்சிகள் எல்லோரும் உருத்தெரியாமல் சென்று, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கான காரணம், அந்தக் கட்சியில் இருக்கிற பலமான அடித்தளம்.

### தி.மு.க.வின் அடித்தளம்

1949-இல் கட்சி ஆரம்பிக்கப்படுகிறது. ஆரம்பிக்கப்பட்ட உடனே அண்ணாவின் தலைமையில் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்கு பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. சட்டத் திட்டக் குழு என்று குழு அமைக்கப்படுகிறது. அந்த சட்டத் திட்டக் குழு இரண்டு ஆண்டு காலம் கலந்துரையாடி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத் திட்டங்கள் என்று, 1951-ல் அண்ணாவிடம் அறிக்கை கொடுக்கிறார்கள். மதுரையில் பொதுக்குழு கூடி, இரண்டு நாள்கள் அந்தக் குழு கொடுத்த அறிக்கையை விவாதிக்கிறது. விவாதித்து சரி, தவற்றை முடிவு செய்து 1951-இல் ஒரு சிறு கையேடாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத் திட்டங்கள் என்று ஒரு புத்தகம் போடப்படுகிறது.

ஒரு கட்சி ஆரம்பித்து இரண்டு ஆண்டு காலம் அந்தக் கட்சியில் இருப்பவர்கள் எல்லோரும் பேசி, விவாதித்து, முடிவு செய்து, அந்தக் கட்சியைத் தோற்றுவித்தவரிடம் கொண்டு சென்று கொடுத்து, அவர் அதைப் படித்துவிட்டு அதை மறுபடியும் ஒரு பொது விவாதத்துக்குக் கொண்டு வந்து முன்வைக்கிறார். தம்பிகள் எல்லாம் என்னவெல்லாம் சொல்ல விரும்புகிறீர்களோ சொல்லுங்கள் என்று. எல்லாரும் சொன்ன பிறகு சரி, தவறு சீர்தூக்கிப் பார்த்து இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத் திட்டங்கள் இவை என்று இரண்டு ஆண்டு கால உழைப்புக்குப் பிறகு, ஒரு புத்தகம் வெளியிடப்படுகிறது.

அப்படியான ஓர் அடித்தளம் இருந்ததால்தான் திராவிட முன்னேற்றக் கழகம், 16 ஆண்டுக்காலம் தீவிரமாகச் செயற்பட்டு அதன் அடித்தளத்தை இன்னும் வலுவானதாக ஆக்கி, எல்லா அமைப்பு களையும் ஒழுங்குபடுத்தி அதன் பிறகு, தேர்தலில் நிற்பது என்று முடிவெடுத்து, பிறகு ஆட்சிக்கு வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

### அறிவாலயம்

1948-ல் 'திராவிடநாடு' இதழில் ஒரு நூலகத்தைப் பற்றி எழுதும்போது அந்தக் கட்டுரைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் வைத்த தலைப்பு 'அறிவாலயம்'. அந்த அறிவாலயம் என்கிற சொல்லை எடுத்துக்கொண்டுதான் கலைஞர், தி.மு.க.வின் தலைமை நிலையத்துக்கு அறிவாலயம் என்று பெயர் வைக்கிறார். தி.மு.க.வைப் பொறுத்தவரை அறிவு என்பது மிகவும் முக்கியம். அறிவோடு இருப்பது மிகவும் முக்கியம். விவாதிப்பது மிகவும் முக்கியம்.

க.திருநாவுக்கரசு அவர்கள் அந்தக் கட்டுரையைத் தொடங்கும்போது ஒரு திருக்குறளுடன் தொடங்குகிறார்.

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்.**

'ஒரு நாள் என்பதை சாதாரணமாக நினைக்காதே. அது உன் உயிரை ஈர்க்கும். இரண்டாகப் பிளந்து உன் வாழ்க்கையை முடிக்கப் போகும் நாளாகவும் இருக்கலாம்' என்கிறது குறள். உன் காலம் அவ்வளவு குறுகிய காலம். ஆனால், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் நாளது ஒன்றுபோல் காட்டி குறையவில்லை. கூடி, கூடி, கூடி, கூடி 75-வது ஆண்டில் வந்து நிற்கிறது, அப்படியென்றால் அது எவ்வளவு வலுவான ஓர் இயக்கமாக இருக்கும் என்று ஆரம்பிக்கிறது அந்தக் கட்டுரை.

அண்ணாவுக்குப் பிறகு, இந்தக் கட்சி இருக்காது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். கலைஞர் இந்த இயக்கத்தைக் காப்பாற்றினார். 'கலைஞருக்குப் பிறகு, இந்த இயக்கம் இருக்காது' என்றார்கள். ஸ்டாலின் இந்த இயக்கத்தைக் காப்பாற்றி வருகிறார். இப்போது உதயநிதி அறிவுத் திருவிழாவை நடத்தியவுடன், 'தி.மு.க. அழிய வேண்டும்' என்று நினைத்தவர்களுக்குப் பதற்றம் அதிகமாகிவிட்டது.

"என்னடா படி படி என்று சொல்வதை விடவே மாட்டேங்கிறாங்க. அண்ணா படி என்று சொன்னார். அடுத்து வந்த கலைஞர் படி என்று சொன்னார். அடுத்து இப்போது இருக்கிற ஸ்டாலின் 'நான் இருக்கிறேன். உனக்காக எதை வேண்டுமானாலும் செய்கிறேன். எப்படியாவது படி' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அடுத்து உதயநிதி அறிவுத் திருவிழா நடத்தி, படி படி என்கிறாரே, தமிழர்கள் தொடர்ந்து அறிவு பெற்றுக்கொண்டு வந்தால், நம் நிலைமை என்ன ஆவது?" என்பதுதான் அவர்களின் பதற்றத்துக்குக் காரணம்.

அடுத்த ஆண்டு அறிவுத் திருவிழா உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாளான நவம்பர் 27 அன்று தொடங்க வேண்டும். ஏனென்றால், இது அவருடைய முன்னெடுப்பு. 27-ஆம் தேதியில் தொடங்கி, ஒவ்வோர் ஆண்டும் 10 நாள்கள் நடந்து, டிசம்பர் 6-ஆம் தேதி அம்பேத்கரின் நினைவுநாளில் அதன் நிறைவு விழா நடக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

### முற்போக்கு இசை முழக்கம்

கரு.பழனியப்பன் உரையாற்றுவதற்கு முன்பு, கோவன் கலைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக, புரட்சிகரப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் கோவன், தமிழ் முற்போக்கு இசையின் முகவரி. ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலும் எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்காலத்திலும் இவர்மீது அடக்குமுறை ஏவப்பட்டது. இருமுறை கைது செய்யப் பட்டாலும் தொடர்ந்து சாதிய, மதவாதச் சக்திகளுக்கு எதிராக இசை முழக்கம் செய்து வருகிறார். அறிவுத் திருவிழாவில், 'எங்கள் தமிழ்நாடு – தந்தை பெரியாரின் வீடு', 'எங்கே வந்து நடத்துறே ரத யாத்திரை', 'ஆர்.எஸ்.எஸ். காரன் வர்றான் எச்சரிக்கை', 'காவி நுழைய முடியாது – இந்தக் கருப்புசாமி கோட்டையிலே' போன்ற பாடல்கள் பார்வையாளர்களிடம் எழுச்சியை ஏற்படுத்தின.